**OPEN ACCESS**

Volume: 5

Issue: 1

Month: July

Year: 2020

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 17.04.2020

Accepted: 13.06.2020

Published: 01.07.2020

Citation:
Ameena Banu, S. (2020). Conflicts Between Caste Hierarchies Interacting in Islamic Society (Presenting Islamic Novels). *Shanlax International Journal of Tamil Research*, 5(1), 116–122.

DOI:
https://doi.org/10.34293/tamil.v5i1.3405

*Corresponding Author:
ameenaaji@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Conflicts Between Caste Hierarchies Interacting in Islamic Society (Presenting Islamic Novels)

**Dr. S. Ameena Banu**
*Assistant Professor, Tamil Department (SF)*
*Sadakathullah Appa College, Tirunelveli, Tamil Nadu, India*
https://orcid.org/0000-0002-9508-511X

**Abstract -** The Indian entry into Islam is through Arab merchants, Sufis and various settlements. Islam used the classical literary forms of Tamils and folk literature as the main medium for its religious spread. The purpose of this article is to explore the issues of interaction within Islamic societies recorded in novels, contemporary literary forms of Islamic literature that continue to operate on such a historical surface..

**Key Words:** Tamil Novels, Islamic Religion Keeranur Jahir raja, Salma, Islamic Society, Caste, Hierarchies, Conflicts.

**References**

1. Ramakrishnan, S, Kriyavin Tharkala Thamizhagarathi, Kriya Pathipagam, Chennai, Second Edition, 2008.
2. Sivasubramanian, N, Panjum Pasiyum – Oor Parvai, Kalaivani Achagam, Palayankottai, 1986.
3. Sankaran, K, Tamil Novalkalil Sathi, The Parker Pathipagam, Chennai, 2002.
4. Keeranur Jagirrajah, Karuttaleppai, Maruda Veliyeedu, Chennai, 2007.
5. Keeranur Jagirrajah, Meenkaratheru, Maruda Publication, Chennai, 2006.
6. Keeranur Jagirrajah, Meenkugaivasigal, Aali Veliyeedu, Chennai, 2010.
7. Salma, Irandam Jamangalin Kathai, Kalachuvadu Veliyeedu, Nagercoil, Third Edition, 2009.
8. Marx, A, Islamiyarukku Ethirana Kattukathaigal, Makkal Kalvi Iyakkam, Tamil Nadu, Second Edition, 1994.
9. Rasool, H.G., Dalit-Muslim Pinkalaniya Islamia Uraiyadal, Bharathi Puthagalayam, Chennai, 2010.
10. Najma, M., Dalith Muslim Ilainjargal Mozhi Adayala Munneduppu… Punaikathai Akkangal… Ungal Noolagam, October 2014.
11. Sivasubramanian, A., Adithala Makkal Varalaru, Makkal Veliyeedu, Chennai, 2002.
12. Pilavendran, S., Tamil Solladalum Manudaviyal Vivathangalum, Amrutha Veliyeedu, Chennai, 2005.
13. Birmuhammad, H., Keelai Sinthanaiyalargal Oor Arimugam, Adayalam Veliyeedu, Trichy, 2009.
14. Muthiah, E., Nattupura Panpattu Marabu: Matru Marabu, Arasu Pathipagam, Madurai, 1998.
15. Vembaiya, K., Dalit Puthinangalin Selnerigalil 'Vadu', Puduvisai, July-Sep.2006.
16. Arunan, Aligal Ennum Vilimbu Nilai Manithargal, Nirappirigai Veliyeedugal, Kumbakonam, 1998.
17. Aravanan, K.P., Tamilar Mel Nigazhntha Panpattu Padaieduppugal, Tamilkottam, Pondicherry, 1994.
18. Gnana.Aloysius, Periyar Parvaiyil Islamum and Buddhamum, Puthumalar Pathipagam, Erode, 2005.
19. Annithamasu, Tamilar Samoogaviyal, World Tamil Research Institute, Chennai, 2000.
20. Kalandai Pirmugammu, Kalachuvadu Pathivugalil Islam, Kalachuvadu Pathipagam, Nagercoil, 2008.

# இசுலாமியச் சமூகத்தில் ஊடாடும் சாதியப் படிநிலைகளுக்கிடையேயான உட்பூசல்கள்: இசுலாமியப் புதினங்களை முன்வைத்து

*முனைவர் செ. ஆமினா பானு*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி (சுயநிதி), திருநெல்வேலி

***ஆய்வுச்சுருக்கம்:*** *இசுலாமிய சமயத்தின் இந்திய நுழைவு அரபு வணிகர்கள் மூலமாகவும் இசுலாமிய மெய்ஞானிகளான சூபிகள் மூலமாகவும் பல்வேறு குடியிருப்புகள் மூலமாகவும் ஏற்படுகிறது. இசுலாமியச் சமயம் தமிழர்களின் செவ்வியல் இலக்கிய வடிவங்களையும் நாட்டார் இலக்கியங்களையும் தனது மதப்பரவலுக்குப் பிரதான ஊடகங்களாகப் பயன்படுத்தின. இத்தகைய வரலாற்று நெடும் பரப்பில் தொடர்ந்து இயங்கி வருகின்ற இசுலாமியப் படைப்பிலக்கியங்களில் சமகால இலக்கிய வடிவங்களான புதினங்களில் பதிவு பெற்றுள்ள இசுலாமிய சமூகங்களுக்குள் ஊடாடும் உட்புசல்கள் குறித்த செய்திகளை ஆய்வு நோக்கில் இக்கட்டுரை விவரிக்கிறது.*

***முக்கியச் சொற்கள்:*** *தமிழ் நாவல்கள், இசுலாமிய சமயம், கீரனுர் ஜாகிர் ராஜா, இசுலாமியச் சமூகம், படைப்பிலக்கியங்கள், சாதியம், படிநிலைகள், உட்பூசல்கள்.*

## தொடக்கமாக

மனிதச் சமூகத்திற்கானச் சமத்துவத்தை வலியுறுத்தியதில் எந்த மார்க்கத்தோடும் இணைவைத்துக் கூறமுடியாத இடத்தைப் பெற்றதே இசுலாம் மார்க்கமாகும். இம்மார்க்கமானது அரேபிய மண்ணிலிருந்து இந்திய மண்ணிற்குப் பரவியதில் வணிகர்களும் இசுலாமிய மெய்ஞானிகளான சூஃபிகளும் கணிசமான அளவிற்கு வரலாற்றுப் பூர்வமானப் பங்களிப்பைச் செய்துள்ளனர். இவ்வகையில், இந்தியாவில் பரப்பப்பட்ட ஒவ்வொரு சமயமும் தனது மதப்பரவலுக்கு இங்குள்ள மக்களின் மொழி வழிப்பட்ட இலக்கியங்களைக் கையிலெடுத்துள்ளன. இசுலாமியச் சமயம், தமிழர்களின் செவ்வியல் இலக்கிய வடிவங்களையும் நாட்டார் இலக்கியங்களையுமே பிரதான ஊடகங்களாகப் பயன்படுத்தியது. இத்தகைய வரலாற்று நெடும் பரப்பில் தொடர்ந்து இயங்கி வருகின்ற இசுலாமியப் படைப்பிலக்கியங்களில் சமகால இலக்கிய வடிவங்கள் என்ற பிரிவின் கீழ் விளிம்புநிலை இசுலாமியச் சமூகமக்களின் வாழ்வியலைக் கீரனூர் ஜாகிர்ராஜா, சல்மா ஆகிய இரண்டு படைப்பாளர்களும் காட்சிப்படுத்தியுள்ளனர். அவர்களின் புதினங்களான கருத்தலெப்பை, மீன்காரத்தெரு, மீன்குகை வாசிகள், இரண்டாம் ஜாமங்களின் கதை ஆகிய படைப்பாக்கங்களின் பதிவு பெற்றுள்ள உட்பூசல்கள் குறித்த செய்திகளை ஆய்வு செய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## உட்பூசல் - விளக்கம்

உட்பூசல் என்பதற்கு “ஒரு குழு, அமைப்பு போன்றவற்றின் உறுப்பினர்களுக்குள் சொந்த நலனை முன்னிட்டு எழும் பூசல்”[1] என்று க்ரியாவின் தற்காலத் தமிழகராதி விளக்கம் தருகிறது. வாழ்க்கையில் எதிர்கொள்ள நேரும் அபத்தங்கள், இருத்தலின் நிச்சயமற்ற

தன்மை, எரிச்சலூட்டும் போலித்தனங்கள், இவற்றின் மீதானக் கோபமும் எரிச்சலும் அதேசமயத்தில் இவற்றையெல்லாம் ஒன்றும் செய்யமுடியாமல் தோற்கிற நிலையும் ஒருத்தனுக்குள் மனக்குமுறலை ஏற்படுத்துகின்றன. பின்பு ஒருசேரக் குவியும் விரக்தியே இறுதியில் அவனைக் கலகக்காரனாக மாற்றுகிறது. இதற்கு, "தனிமனிதன் முதலில் தன்னோடும் பின் சகமனிதனோடும் சமூகத்தோடும் ஒத்துப் போக முடியாமல் மாறுபாடு கொள்கின்றான்"[2] எனும் கருத்தானது வலுச்சேர்க்கிறது. இதன்கீழ் இந்துச் சமூகத்தின் வைதிக வருணாசிரமப் பாகுபாட்டை இசுலாமும் தக்கவைத்துக் கொண்டுள்ளது. இதனால்தான் இசுலாமியச் சமூகத்திற்குள்ளும் ராவுத்தர், லெப்பை, மரைக்காயர், மீன்காரன் உட்பட பல்வேறு சாதிய உட்பிரிவுகள் உள்ளன. இந்தப் பிரிவுகளுக்குள் ஒத்துப்போக மறுக்கின்ற அல்லது அனுசரித்துச் செல்ல மறுக்கின்ற இடத்தில்தான் சமூக இயல்பை மீறுகிற அல்லது புறக்கணிக்கின்ற செயல்பாடானது நிகழ்கிறது. இத்தகைய எதிர்ப்புணர்வு ஆய்வுக்குட்பட்ட புதினங்களில் தனிமனிதன் சார்ந்தே நிகழ்கிறது. தனிமனிதன் ஏற்படுத்துகிற கலகம், இறுதியில் இலக்கமற்று அலைந்து ஒரு கட்டத்துடன் நின்று போகிறது.

### கருத்தலெப்பையில் வெளிப்படுத்தப்படும் சாதிய உட்பூசல்கள்

தமிழைத் தாய்மொழியாகக்கொண்ட இசுலாமியர்களான ராவுத்தர், லெப்பைகளுக்குள் உருவாகுகிற பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் பல சமயங்களில் உக்கிரமாகி ராவுத்தன் உசத்தி என்றும், லெப்பை கீழ் என்றும் அடையாளப்படுத்தப்படுகின்றன. லெப்பைகள் பொருளாதாரத்தில் மேம்பட்ட நிலையிலும் இவ்விரு பிரிவினருக்கிடையேயான முரண்பாடுகள் தீர்க்கப்பட முடியாததாகவே தொடர்ந்து நிலவி வருகின்றன.

உதாரணமாக, தமிழ்ச்சூழலில் பொதுப்புத்தியில் அசைவ உணவு சாப்பிடுபவர் தாழ்ந்த குலத்தைச் சேர்ந்தவர் என்றும், சைவ உணவு சாப்பிடுபவர் உயர்ந்த குலத்தைச் சேர்ந்தவர் என்பதுமான உணவு சார்ந்த கட்டமைப்பு நடப்பியலில் உள்ளது. அதிலும் குறிப்பாக இசுலாமியர்கள் அசைவர்கள் என்ற அடையாளப்படுத்தலுக்குள்ளும் அவர்களுக்குள் இருக்கிற சாதிப் படிநிலைக்கு ஏற்ப அசைவ உணவை வகைப்படுத்தப்படுதலும் கூட காணப்படுகின்றது. ஆய்வுக்குட்பட்டப் புதினம் இந்நிலைப்பாட்டைப் பதிவு செய்துள்ளது.

இது குறித்து, " ஆமா, மாட்டுக்கறி திங்கிற லெவப் பயல்னு சாவடியில் மானங்கெடப் பேசுறானுங்க நாம நின்டு நாயம் பேசுனா ஒடம்பு நாறுதுன்டு நாலு எட்டுத் தள்ளி நிக்கிறானுங்க" (க.லெ.,ப.12) எனும் புதின வரிகள் எடுத்துரைக்கின்றன. இவற்றின் மூலம், மாட்டுக்கறி சாப்பிடுவதால் லெப்பை என்ற சமூகப் பிரிவை இசுலாமியச் சமூகத்திற்குள்ளேயே இழிவாகக் கருதும் மனோநிலையைப் புதினம் காட்சிப்படுத்தியுள்ளது. தொடர்ந்து தமிழ்ச் சமூகத்தில் நிலவிவரும் மாட்டுக்கறி சாப்பிடுகிறவர்களின் மீதான வருணாசிரமத் தாக்குதலின் பின்னணியில் வைத்தே மேற்கண்ட நிகழ்வையும் அதன் பின்புலத்தையும் அடையாளம் காண வேண்டியுள்ளது.

### சாதியை முன்வைத்து அவமானப்படுத்துதல்

இசுலாமியச் சமூகப் படிநிலைக்கு ஏற்பவே தனித்தனியான மசூதிகளும் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு சாதியும் தான் சார்ந்திருக்கின்ற மசூதியில் மட்டுமே முதன்மை பெறுகின்றது. சில மசூதிகளில் அதற்குரியவர்கள் அல்லாத மற்ற சாதி மக்கள் பின்னுக்குத் தள்ளப்படுகின்றனர். இதன் தொடர்ச்சியாகவே, அவர்களுக்கு இடையே பலவிதமானப் பூசல்களும் பழிவாங்கும் நடவடிக்கைகளும் நிகழ்கின்றன. இது குறித்து,

“சாதிகளுக்கிடையே நடக்கும் பூசல், சாதி வேறுபாட்டினால் மட்டுமே நடப்பன அல்ல. சுரண்டல், சமத்துவமின்மை, அநீதி போன்ற காரணங்களாலும் சாதிகளுக்கிடையே பூசல்கள் தோன்றுகின்றன”[3] எனும் கு.சங்கரனின் கருத்தானது பூசல் நடைபெறுவதற்கானக் காரணத்தை எடுத்துரைக்கிறது. இதனடிப்படையில், ஆய்வுக்குட்பட்டப் புதினத்தில் லெப்பைகளில் ஒருவரான நூர்முஹம்மது மசூதியின் தேர்தலில் போட்டியிட்டதற்காக ராவுத்தர்களால் அவமானப்படுத்தப்படுகிறார். லெப்பைகளை அடிப்பதற்காகவே கூலிக்கு ஆட்களை ஏற்பாடு செய்கின்றனர் ராவுத்தர்கள். இதன்காரணமாக ஏற்படுகிற மோதலினால் லெப்பைகளில் பலருக்குக் காயங்கள் ஏற்படுகின்றன. எப்பொழுதும் அதிகாரத்தின் கைப்பொம்மையாக இருக்கின்ற காவல்துறையினர் எவ்வித விசாரிப்புமின்றி லெப்பைகளை மட்டுமே காவல்நிலையத்திற்கு இழுத்துச் செல்கின்றனர். உலகஅளவில் இசுலாமியர்களுக்கு எதிரானப்பயங்கரங்களும், வன்முறைகளும் ஒடுக்குதல்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கிற தருணத்தில் இசுலாமியர்களுக்குள்ளும் வருணாசிரமத்தின் தாக்கமும், அதைத் தக்கவைத்தலுக்கானப் போராட்டங்களும் நடைபெறுவதை வேற்றுச் சமய நிகழ்வுகளுக்கு இணையாகவே ஆய்விற்குரிய புதினம் பதிவு செய்துள்ளது. “ஒரு வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த நூர்முஹம்மது லெவையின் தாடியைப் பிடித்து இழுத்த கிழக்குத் தெரு மீரான் மைதீனால் ஊருக்குள் தொடங்கியது கலகம். நூர்முஹம்மது மகாசபை தேர்தலில் நின்ற காரணத்தால் நடுத்தெருவில் அவமானப்பட நேர்ந்தது. கிழக்குத் தெருவின் முரட்டு ஆசாமிகளுக்குப் பிரியாணி போட்டுப் பணம் தந்து விலைக்கு வாங்கினார்கள் ராவுத்தர்கள். அடிதடி ரகளைக்காக ஆயக் குடிகாரர்களும் தருவிக்கப்பட்டிருந்தனர். கடைவீதியில் உலா வந்த லெவைகளின் உடம்பில் ரத்தக் காயங்கள். ஊருக்கு ஒதுக்குப்புறமாகவே இருந்து வந்த போலீஸ்காரர்கள் முதன்முதலாக உள்ளே நுழைந்து சில லெவை வீட்டுப்பையன்களைக் கச்சேரிக்கு அழைத்துப் போனார்கள். கருத்த லெவையும் தன் பங்குக்கு ஒரு நாள் லாக் அப்பைப் பார்த்து வந்தான்” (க.லெ.,ப.43) இதனூடாக, இசுலாமியச் சமூகத்தில் மைய நீரோட்டத்தில் இருக்கும் ராவுத்தர்கள், லெப்பைகளுக்கு இடையேயான வெளிப்படையான மோதல்கள் பிற சமூகத்தில் உள்ளதைப் போலவேக் காட்சியளிக்கின்றன. இசுலாம் என்பது சாந்தியும் சமாதானமும் நிறைந்தது, சகோதரத்துவமானது என்ற நிலைப்பாட்டை தகர்க்கும்விதமாகவே மேற்கண்ட பதிவுகள் அமைகின்றன.

### மீன்காரத் தெருவில் வெளிப்படும் சாதிய உட்பூசல்கள்

இசுலாமியர்களின் வாழுமிடம் தெருக்கள் சார்ந்து இரு வேறுபட்டக் குடியிருப்புகளாக உருவம் பெறுகின்றன. இதில் சித்திரிக்கப்பட்டுள்ள வாழ்வுலகம் சிக்கல் நிறைந்ததாகவும், உயர்ந்தது தாழ்ந்தது என்பது போன்ற மனோபாவங்களைப் பிரதிபலிப்பவையாகவும் தான் உள்ளன. இந்த வகையில் சித்திரிக்கப்படும் பங்களாத்தெரு மீன்காரத்தெரு எதிர்வு ஜாகிர்ராஜாவின் புதினத்தின் முக்கியச் சரடாகப் படர்ந்து கிடக்கிறது. வறுமையின் காரணமாகப் பங்களாத்தெரு முதலாளிமார்களின் வீடுகளில் வேலை செய்யும் மீனவத் தெருப் பெண்களை அவ்வீட்டிலுள்ள ஆண்கள் தம் பாலியல் இச்சைக்குப் பயன்படுத்துகிறார்கள். இத்தகைய வரம்பு மீறலை முதலாளிமார்களின் மனைவிகளும் கண்டு கொள்வதில்லை. மீனவப் பெண்களும் ஆண்களின் பாலியல் தேவைக்குச் சுயவிருப்புடனேயே உட்படுகின்றனர். இருப்பினும், முதலாளி சலீமின் ஆசைநாயகியாக இருந்த மீனவப் பெண் ஆமினா மட்டும் போராடி அவனைக்

கணவனாக அடைய விரும்புகிறாள். அது நிறைவேறாத நிலையில் மனதளவில் மட்டும் எதிர்ப்புணர்வைக் காட்டுபவளாக ஒருகட்டத்தில் முடங்கிப்போகிறாள் என்பதாக புதினத்தில் காட்சிப்படுத்தப்படுகிறாள். "அவன் பேசப்பேச அவளுக்குப் பற்றி எரிந்தது. எதிர்ல இருக்குற சோத்து வீட்டுக்குள்ள செவுத்துல ஆணியடிச்ச சாமான் பஹார்ல அருவாமனை தொங்கிக்கிட்டிருக்கு. ஓடிப்போய் எடுத்து வந்து ஒரே சீவு சீவுனால் என்ன இவனை. மீங்காரின்னா அவ்வளவு எளக்காரமாப் போச்சு. உள்ளுக்குள் கருவினாள்... அன்பம்மாட்ட மன்றாடிக் கேட்டேனே. சரின்னு விட்டுட்டுப் போனவ மறுநாள் என்னெத் தோட்டத்துக்கு கூட்டிக்கிட்டுப் போயி கலச்சுட்டாளே. அந்தக் கருவத் தாங்கியிருந்தா எங்க நைனார் அண்ணே போதும். ஏழு நிக்காஹ்ல ஒருத்தனா நீ மாப்பிள்ளையா உக்காந்திருப்பே. எல்லாம் திட்டம் போட்டுத்தானேடா செய்றீங்க பணக்காரனுங்க. மனதுக்குள் ஆமினா பேசிக் கொண்டேயிருந்தாள். மற்றபடி அவனை வெறித்தது வெறித்த வாக்கில் நின்றாள்" *(மீ.தெரு., ப.31 )*

ஆமினாவின் மன ஓட்டம் சலீமின் பாலியல் ஏமாற்றுச் செயலுக்கான எதிர்வினையாக மாறுவதை எடுத்துரைக்கிறது. இருப்பினும், ஆமினாவின் கோபத் தெறிப்பான வார்த்தைகளெல்லாம் வெகுசீக்கிரத்திலேயே ஈரமற்றுப் போகின்றன. மேலும், பங்களாத்தெரு வீடுகளில் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்ட மீன்காரத்தெரு பெண்களில் சிலரைத் தேர்வுசெய்து ஒவ்வொருவருக்கும் கருகமணியுடன் ஐந்து பவுன் நகை சீர் கொடுத்துப் பிரியாணி விருந்தோடு நடத்தப்படும் இலவசத் திருமணங்களின் மூலம் தமிழகத்தின் முக்கிய ஊர்களில் நடத்தப்படும் இலவசத் திருமணங்களின் பின்புலத்தில் மறைக்கப்பட்ட பயங்கரங்கள் திறக்கப்படுகின்றன.

**எல்லா நிலைகளிலும் முரண்பாடு கொள்ளுதல்**

பொதுத்தளத்தில் மையம் விளிம்பு ஒன்றுக்கொன்று எதிராகவும், விலகியுமே செல்கின்றன. இந்த விலகல் அனைத்துப் பண்பாட்டு அசைவுகளிலும் இயக்கம் பெறுகின்றன. இதன்கீழ் இசுலாமியச் சமூகத்தில் மைய நீரோட்டத்தில் இருக்கும் ராவுத்தர்களுக்கும், விளிம்புநிலையில் இருக்கும் மீன்காரர்களுக்கும் இடையேவெளிப்படையான மோதல்களைப் பற்றிய பதிவுகள் ஆய்வுக்குட்பட்ட புதினத்தில் தெளிவாக இடம்பெறவில்லை. இருப்பினும், மோதல்களை உருவாக்குகிறவகையில் அவர்களுக்கிடையே நிலவுகின்ற அடிப்படை முரண்பாடுகளைப் புதினம் காட்சிப்படுத்தியுள்ளது. "பங்களாத் தெருப் பசங்க சிகரெட் குடுச்சுட்டு நிப்பானுக. நாம போனா மீங்கார குட்டின்னு கேலி பேசுவானுகன்டு தேங். வகுந்து போடுடீ தாய்லி எவன்ல அது. கரைவேட்டிய கச்சை கட்டிப் பதற்றமான காசீமை தன் கைகளால் தணித்தாள் ரஜியா. சும்மா குதிக்காதல ஒந்தம்பி நைனாவாட்ட அவுனுங்க போக்கு அது. நாம ஒதுங்கிக்க வேண்டியது தேங். பங்களாத் தெருவுக் காரங்கள்ட்ட ஒம் பெறந்தவன் வம்பிலுக்கறதில்லையா" *(மீ.தெரு.,ப.86)* எனும் வரிகள், மீனவர்கள் மீதானப் பங்களாத் தெருக்காரர்களின் வன்மத்தையும் அதற்கு மீன்காரர்கள் காட்டுகிற எதிர்ப்புணர்வுகளையும் எடுத்துரைக்கின்றன.

**மீன்குகைவாசிகளில் வெளிப்படுத்தப்படும் சாதிய உட்பூசல்கள்**

சண்முகநதிப் படுகைகளிலும் தோப்புகளிலும் சுற்றித் திரிந்த சோழியச்சி வள்ளி என்பவள் மீன்காரனான நைனாவிடம் தொடுப்பு வைத்து வயிற்றுப் பிள்ளையுடன் வஞ்சுழலில் சிக்கி இறக்கிறாள். பள்ளி வாசல் கபுறுவில் சோழிச்சியை அடக்கம் செய்ய இடம் கிடைக்கவில்லை. இதனால் சோழிச்சிக்காக

எதிர்த்துநிற்பதிலும்மூர்க்கமாகப்போராடுவதிலும் தான் நைனாவின் ஜீவன் இயங்குகிறது. இருப்பினும் பறச்சி என்பதாலேயே வள்ளியின் சடலம் பள்ளிவாசலுக்கு உள்ளே அனுமதிக்கப்படவில்லை. இதனால் நைனா பள்ளிவாசலுக்கு எதிர்புறத்தில் குழி வெட்டுகிறான். பின்னர் அங்கேயே மீன்காரப் பெண்களுடன் சேர்ந்து வள்ளியைக் குளிப்பாட்டுவதுடன் ஜனாஸா தொழுகை நடத்தி அடக்கமும் செய்கிறார்கள். நைனாவின் இச்செயல்பாட்டிற்கு ராவுத்தர்கள் மத்தியில் எதிர்ப்புணர்வு தோன்றுகிறது. இதனைப் புதினம் காட்சிப்படுத்தியுள்ளது.

"சேவன்னா சையன்னாவோட மேட்டுல ஏறிகுழி தோண்டனப்பவே அவெங்கைய வெட்டீருக்கணும். யாரு பூமில யாரக் கொண்டுட்டு வந்து பொதைக்கிறது? இதக்கேக்க எவனுக்காச்சி தெகுரியமிருந்துச்சா..? நல்ல ஜாதி மகனுகளாயிருந்தா எதுக்கு கம்முன்டு வேடிக்கை பாத்துக்கிட்டிருக்கணும். அவெம் ரவுடிப்பய்யேங். தடுக்கப்போனா இவுனுக கையக்கால வெட்டிப் போடுவேம், பயந்து கிட்டுத்தான விட்டானுக. இப்ப அனுபவி. நம்மூர்ல என்ன ஒரு போலீஸில்லியா கச்சேரி இல்லியா. போயிச் சொன்னா வந்து நாயங்கேக்க மாட்டாங்களா? என்னடா ஒரு அக்குறமம் விட்டா இவுனுக ஊரையே மீன்காரத் தெருவாக்கி நாற வச்சுருவானுக. இது நடக்குதா இல்லியா பாரு.." (மீ.குகை.,ப. 105) எனும் புதின வரிகளின் மூலம் விளிம்புநிலையிலுள்ள மீன்காரனான நைனாவின் எதிர்ப்புணர்வு செயல்பாடு அதனை எதிர்க்கின்ற துணிவற்றவர்களாக அதிகார மையத்திலுள்ள ராவுத்தர்கள் இருக்கின்ற நிலையும் மீனவர்கள் மீதான வன்மமும் வெளிப்படுகின்றன.

## இரண்டாம் ஜாமங்களின் கதைகளில் வெளிப்படுத்தப்படும் சாதிய உட்பூசல்கள்

அதிகாரம் தனக்கான உரையாடலை நிகழ்த்தும்போது அது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்றும் அனைவரும் தனக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்றும் விரும்புகிறது. அவ்வாறின்றி அதிகாரத்தின் உரையாடல் எதிர்தரப்பினரால் சவாலுக்குள்ளாக்கப்படும் போதோ, நிராகரிக்கப்படும்போதோ சம்பந்தப்பட்டவர்களைத் தண்டிக்கிறது. இதன்கீழ் ஆய்வுக்குட்பட்ட புதினத்தில், கணவனால் கைவிடப்பட்ட பெண் பாத்திமா. இளமைப் பருவத்தில் இருக்கும் அவள் தனக்கு ஒரு துணையைத் தேடிக் கொள்கிறாள். அவன் மாற்று மதத்தினராக இருக்கின்ற தருவாயில் இருக்கும் ஊரைவிட்டுச் செல்கின்றனர். இதை அறிந்த ஊர் ஜமாத்தார்கள் அவர்களை ஊருக்குள் அனுமதிக்கக்கூடாது என்று கட்டளை இடுகிறது. மட்டுமல்லாது, வயோதிக நிலையில் உள்ள அவளது தாயை ஊர் விலக்கி வைக்கிறது. இதனால், கோபமுற்ற பாத்திமாவின் தாய் நூரம்மா, அச்சமூக ஆண்களின் ஒழுக்க நடவடிக்கைகளின் மீது கேள்வி எழுப்புகிறாள். இதனால் ஆத்திரமடைந்த ஆண்கள் அவளைத் தாக்குவதற்கு முற்படுகின்றனர். இதனைப், புதினம் பின்வருமாறு காட்சிப்படுத்தியுள்ளது. "அந்தக் கெழட்டு முண்டைய அடிச்சுக் கொல்லுங்கடா என்று சொல்லிக் கூட்டத்திற்கு நடுவிலிருந்து பந்தைப் போலத் தாவிக்குதித்து ஓடி வந்தார்கள். நாட்டாண்மையும் முத்தவல்லியும் ஒரு நிமிடம் செய்வதறியாமல் குழம்பிப் போய் நிற்க, காதர் ஒரே தாவலில் ஓடிவந்து நூரம்மாவை மறைத்துக் கொண்டு குறுக்காக நின்று கொண்டான். சுலைமான் காதரை எதிர்த்துக் கத்தினான். அதுக்காக அவ ஜமாஅத்த எதுத்துப் பேசுறத விடமுடியுமா? என்ன நீங்க பெரியமனுஷனாஇருந்துக்கிட்டுஇப்படியெல்லாம் பேசுறீங்க? ஒரு பொட்டச்சிய பேச விட்டுக் கேட்க நாம ஆம்பளைங்களா இல்லெ பொட்டைப் பயலுகளா?" (இ.ஜா.க.,ப.275) எனும் புதினவரிகள் மற்ற சாதிப் பெண்களோடு உறவு வைத்துக்கொள்வது

இசுலாமிய ஆண்களின் உரிமையாகவும் இயல்பாகவும் இருப்பதோடு பெண்கள் இத்தகையத் துணையைத் தேடும்போது அது சமூகத்திற்கே ஏற்பட்ட பெரிய பாதிப்பாகவும் கருதப்படுவதை எடுத்துக் காட்டுகின்றன.

## தொகுப்புரை

சாதியம் எல்லோரிடமும் ஏற்புப்பெற்ற படிநிலை அமைப்பை அடிப்படையாகக் கொண்டது. எனவே ஒரே தகுதியைக் கொண்ட சாதிப் பிரிவினருக்குள்ளும் மற்றொரு சாதியினரை அடக்கவும், அதிகாரம் செய்யவுமான மனநிலைகள் தொடர்கின்றன. தமிழ் இசுலாமிய சமூகம் எனும் ஒற்றைச் சொல்லாடலைக் கலைத்து, அதற்குள் இயங்கும் இராவுத்தர், லெப்பை, மீன்காரன் என்றும் பல்வேறு மேல் கீழ் அம்சங்களை அவர்களின் பன்முகப்பட்ட வாழ்வியலை தமிழ்ச் சமூகத்திற்கு அடையாளப்படுத்துவதாக ஆய்வுக்குட்பட்ட புதினங்களை அடையாளங் காணலாம்.

## பயன்பட்ட நூல்கள்

1. எஸ்.ராமகிருஷ்ணன், கிரியாவின் தற்காலத் தமிழகராதி, கிரியா பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 2008.
2. நா.சிவசுப்பிரமணியன், பஞ்சும் பசியும் - ஓர் பார்வை, கலைவாணி அச்சகம், பாளையங்கோட்டை, 1986.
3. கு.சங்கரன், தமிழ் நாவல்களில் சாதி, தி.பார்க்கர் பதிப்பகம், சென்னை, 2002.
4. கீரனூர் ஜாகிர்ராஜா, கருத்தலெப்பை, மருதா வெளியீடு, சென்னை, 2007.
5. கீரனூர் ஜாகிர்ராஜா, மீன்காரத்தெரு, மருதா வெளியீடு, சென்னை, 2006.
6. கீரனூர் ஜாகிர்ராஜா, மீன்குகைவாசி கள், ஆழி வெளியீடு, சென்னை, 2010.
7. சல்மா, இரண்டாம் ஜாமங்களின் கதை, காலச்சுவடு வெளியீடு, நாகர்கோவில், மூன்றாம் பதிப்பு, 2009.
8. அ.மார்க்ஸ், இசுலாமியருக்கு எதிரான கட்டுக்கதைகள், மக்கள் கல்வி இயக்கம், தமிழ்நாடு, இரண்டாம் பதிப்பு, 1994.
9. ஹெச்.ஜி.ரசூல், தலித்முஸ்லிம் பின்காலனிய இஸ்லாமிய உரையாடல், பாரதி புத்தகாலயம், சென்னை, 2010.
10. மு.நஜ்மா, தமிழ் முஸ்லிம் இளைஞர்கள் மொழி அடையாள முன்னெடுப்புபுனைகதை ஆக்கங்கள், உங்கள் நூலகம், அக்டோபர் 2014.
11. ஆ.சிவசுப்பிரமணியன், அடித்தள மக்கள் வரலாறு, மக்கள் வெளியீடு, சென்னை, 2002.
12. ச.பிலவேந்திரன், தமிழ்ச் சொல்லாடலும் மானிடவியல் விவாதங்களும், அம்ருதா வெளியீடு, சென்னை, 2005.
13. எச்.பீர்முஹம்மது, கீழைச்சிந்தனையாளர்கள் ஓர் அறிமுகம், அடையாளம் வெளியீடு, திருச்சி, 2009.
14. இ.முத்தையா, நாட்டுப்புறப் பண்பாட்டு மரபு: மாற்றுமரபு, அரசு பதிப்பகம், மதுரை, 1998.
15. க.வேம்பையா, தலித் புதினங்களின் செல்நெறிகளில் “வடு”, புதுவிசை, ஜீலை-செப்.2006.
16. அருணன், அலிகள் என்னும் விளிம்புநிலை மனிதர்கள், நிறப்பிரிகை வெளியீடுகள், கும்பகோணம், 1998.
17. க.ப.அறவாணன், தமிழர் மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள், தமிழ்க்கோட்டம், புதுச்சேரி, 1994.
18. ஞான.அலாய்சியஸ், பெரியார் பார்வையில் இஸ்லாமும் புத்தமும், புதுமலர் பதிப்பகம், ஈரோடு, 2005.
19. அன்னிதாமசு, தமிழர் சமூகவியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2000.
20. களந்தை பீர்முகம்மது, காலச்சுவடு பதிவுகளில் இஸ்லாம், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2008.